The Conference Successfully fostered Collaboration innovation, and strategic planning to strength Catholic healthcare in India. By addressing challenges, exploring opportunities and charting pathways for growth, the event reaffirmed the church's unwavering commitment to compassionate and sustainable healthcare for all. We thank and appreciate Sr. Sebastine, Health Commission Secretary (Under Generalate) Sr. Sofia, Sr. Marthal (St. Francis of Assisi Province – North), Sr. Leo (St. Joseph Province, Chennai.) Sr. Philominal St. Joseph Province, Chennai) Sr.Jansi Rani (Bishop Jhon Allen Province, Trichy) for all your active participation.

---

## 4. இரத்தம், உறுப்புகள் மற்றும் உடல் தானம் பற்றிய விழிப்புணர்வு:

23.03.2025 அன்று கூடுவாஞ்சேரியில் உள்ள நல்லாயன் ஆலயத்தில் Blood Donation Camp மற்றும் Organ & Body Donation Awareness நிகழ்வானது புனித தோமையார் மருத்துவமனை அருட்சகோதரிகள் மற்றும் பணியாளர்களால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் Sr. Dr. Mary Jenova அவர்கள் இரத்தம், உறுப்புகள் மற்றும் உடல் தானம் பற்றிய விழிப்பணர்வு கருத்துகளை மக்களோடு பகிர்ந்துக் கொண்டார்கள். யார் யார் இந்த தானங்களை செய்யலாம், யார் செய்யக் கூடாது, எவ்வளவு மணிநேரத்திற்க்குள் தானங்கள் செய்யப்பட வேண்டும், இதனை எவ்வாறு முறையாக பதிவு (Registration) செய்ய வேண்டும் என்று தெளிவாக பங்கு மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

Sr.Sebastine (Health Commission Secretary) மற்றும் Sr. Indira இருவரும் இணைய தளத்தில் தானங்களை பதிவுச் செய்ய மக்களுக்கு வழிகாட்டினார்கள். இதில் 50க்கும் மேற்பட்டோர் முன் வந்து பல்வேறு தானங்களில் பதிவுச் செய்துக் கொண்டார்கள். 69 மக்கள் இரத்த தானம் செய்தார்கள். இவ்வாறாக இந்நிகழ்வானது மிகவும் பயனுள்ள விதத்தில் அமைந்தது.











## 5. மருந்தக ஆய்வகம் புதுப்பித்தல்:

22.03.2025 அன்று அச்சரபாக்கம், புனித தோமையார் மருந்தகத்தில் புதிதாக இரத்தம் மற்றும் சீறுநீரக பரிசோதனை கருவிகள் வாங்கப்பட்டு மக்கள் பயனுக்கு வைக்கப்பட்டுள்ளது. இங்கு பணிபுரியும் Lab Technician புனித தோமையார் மருத்துவமனையில் ஒரு வாரம் பயிற்சி பெற்று சென்றார். அதனை தொடர்ந்து Sr. Mariyammal இரண்டு நாட்கள் மருந்தகத்தில் தங்கி அங்கு பணிபுரிவோருக்கு ஆய்வக கருவிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று பயிற்சி வழங்கினார்கள்.

இப்போது அச்சரபாக்கம் மருந்தகத்தில் Complete Blood Count, Electrolytes, Renal Function Test, Lipid Profile, Liver Function Test, Sugar Test, Urine Analysis ஆகிய பரிசோதனைகளை நாம் செய்துக் கொள்ளலாம்.

இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்த சபை தலைமை அன்னை ஆரோக்கியம் மற்றும் Health Commission பொறுப்பாளர்களுக்கும் எங்களின் நன்றிகள்.

---

## 6. Smart Class Room



As for the present time, it is crucial that we continuously update and enhance the knowledge of nursing students, as they are involved in life-saving services. To ensure they are well-prepared, we must provide them with the most up-to-date training and resources. In pursuit of this goal, we have introduced the Smart Classroom a digital learning space designed to enhance teaching methods and efficiency. By integrating technology, it fosters a more interactive and engaging educational experience.



This initiative, aimed at equipping St. Theresa of Child Jesus School Of Nursing students with up-to-date knowledge and skills, led to the creation of the SMART CLASSROOM, which was made possible through the generous support of the CEI – ITALIAN BISHOPS CONFERENCE. It was inaugurated on March 15, 2025.We thank and appreciate Sr. Lourdu Mary, the Principal of School of Nursing for her initiative.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

## 1. புனித வளனாரின் சிந்தனை துளிகள்




இறைபற்றோடும், இன்முகத்தோடும் வானவர் வாக்கை சிந்தையில் வைத்து, மரியன்னையை ஏற்று இறைவழியில் வாழ்ந்த நம் சபையின் பாதுகாவலர், புனித சூசையப்பரின் நற்பண்புகளை மார்ச் மாதம் சிந்திக்க, தியானிக்க, செயல்பட சிந்தனை துளிகளை கொடுத்த அருட்சகோதரி. விக்டோரியா J, அவர்களுக்கு Communication Commission சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

## 2. புதுமை பெண்கள்.. புதிய சவால்கள்..



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 06.03.2025 அன்று மாதா தொலைக்காட்சியில் புதுமை பெண்கள், புதிய சவால்கள் என்ற தலைப்பில் ஒரு மணிநேர சிறப்பு நிகழ்ச்சியில் புனித தோமையார் மருததுவமனை செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்வில் இன்றைய நவீன உலகம் பெண்களுக்கு சவால்களா? அல்லது உந்துசக்தியா? என்ற கருத்துகளில் இரண்டு குழுக்களாக அமர்ந்து தங்களின் கருத்துக்களை விவாதித்தார்கள்.

“பெண்கள் உயர்ந்தால் உலகமே உயரும்” என்ற தந்தை பெரியாரின் பொன் மொழிக்கு ஏற்ப பெண்களின் முன்னேற்றத்திற்க்கு இன்றைய நவீன உலகத்தின் தொழில் நுட்ப வளர்ச்சி பெண்களுக்கு ஒரு உந்து சக்தியாகவே அமைந்துள்ளது என்று நிறைவு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும். வாய்பினைக் கொடுத்த மாதா தொலைக்காட்சி நிர்வாகத்திற்க்கு நன்றிகள்.

புனித தோமையார் மருத்துவமனையில் பணிச் செய்யும் நம் சபையின் இலக்கு மக்களாகிய பெண்களுக்கு இது ஒரு பெரும் வாய்ப்பு. இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட மருத்துவமனை நிர்வாக குழுவினருக்கு நன்றிகள்.

## 3. நெகிழி பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு:





28.03.2025 அன்று வந்தவாசி முகாமில் உள்ள ஆர்.சி.எம். பள்ளி மாணவர்களை கொண்டு நெகிழியை எவ்வாறு தடை செய்வது, நெகிழி பயன்பாடு பற்றிய விழிப்புணர்வும் Rally–யும் நடத்தப்பட்டது. இதற்கு உறுதுணையாக இருந்த அருட்பணி. ஆரோக்கியராஜ் மற்றும் தலைமை ஆசிரியை அமலோற்பவம் மற்றும் அருட்சகோதரி. Ephiphani Mary ஆகியோருக்கு எங்களின் நன்றிகள். இதில் 55 மாணவ– மாணவிகள் கலந்து கொண்டனர்.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

# சமூக பணிக்குழு

## 1. சிறைப்பணி சேவைகள்



a. செங்கல்ட்டு மாவட்டசிறை மற்றும் மதுராந்தகம் கிளைசிறை சந்திக்கப்பட்டன. சந்தித்த மொத்த சிறைவாசிகள் 74 பேர். 28 சிறைவாசிகளின் இல்லங்கள் அலைபேசி மூலம் தொடர்பு கொள்ளபட்டன. 2 நபர்கள் பெயிலில் எடுக்கப்பட்டன. 74 நபர்களுக்கு யோகா மற்றும் போதைப் பொருள்கள் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டன. மேலும் படிப்பதற்கு ரூபாய் 2000 மதிப்புள்ள புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. 6 நபர்கள் ஆற்றுபடுத்தப்பட்டன.



b. 16.03.2025 அன்று சிறையில் வாடும் சிறைவாசிகளுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் சிலுவை பாதையும், சிறப்பு திருப்பலியும் கோவலத்திலுள்ள தூய கார்மேல் அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்வில் தன்னார்வலர்களுக்குகான கூடுகையானது கூட்டபட்டு பணி பற்றிய மீள்பார்வை செய்யப்பட்டன. தொடர்ந்து எதிர்கால திட்டமாக திருபயணிகளில் யூபிலி ஆண்டை முன்னிட்டு தழிழ்நாடு அளவில் தன்னார்வலர்களுக்கு சிறப்பு கருத்தரங்கு வைக்க முடிவு எடுக்கப்பட்டன.





c. 26.03.2025 அன்று செங்கல்பட்டிலில் உள்ள தூய அன்னால் பள்ளியில் பயிலும் சிறார்களின் பெற்றோருக்கு சிறார் பாலியல் வன் கொடுமை விழிப்புணர்வு கருத்தரங்கானது நடைபெற்றது. அதில் வழக்கறிஞர்களும், சிறைப்பணியகத்தின் சார்பாக தன்னார்வலர்களும் கலந்து கொண்டு வன்னொடுமைகள் நிகழும் போது எவ்வாறு பாதுகாப்பது, அதை எவ்வாறு கையாளுவது மேலும் பாதிக்கப்பட்டோர் அரசிடமிருந்து பெற வேண்டிய உரிமைகள் பற்றி பேசப்பட்டன. இந்நிகழ்வில் 600–க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## 2. மகளிர் தினவிழா:

a. 09.03.2025 அன்று நமது சபை தலைமை அன்னை அருள் சகோதரி ஆரோக்கியம் FSJ அவர்களின் தலைமையில் பெண்கள் தின விழாவானது தலைமையகத்தின் கீழுள்ள சமூகப்பணி மையத்தின் சார்பாக தூய தோமையார் மருத்துவமனையில் கொண்டாடப்பட்டன. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அருள்சகோதரி. டாக்டர் மேரி ஜெனோவா, சபை ஆலோசகர் மற்றும் திருமதி. ஆரோக்கிய ஹரீனா, Society of Magic தொண்டு நிறுவன நிறுவனர் கலந்துக்கொண்டு மகளீருக்கு வாழ்த்துக்களும், பரிசுகளும் வழங்கி மகிழ்ந்தனர். மேலும் தலைமை அன்னை அவர்கள் கணவனை இழந்த 5 பெண்களுக்கு சிறு வியாபாரத்திற்கு ஒரு லட்சம் கடனுதவியாக கொடுத்தார்கள். மேலும்



சிறந்ததோர் சிறப்புரையாற்றி அனைவரையும் மகிழ்வித்தார்கள். இவ்விழாவில் தூய தோமையார் மலை பகுதியை சார்ந்த பெண்களும் மற்றும் முகலிவாக்கத்தை சார்ந்த பெண்களும் கலந்துக் கொண்டு பயனடைந்தனர். இதற்கான ஏற்பாடுகளை தலைமையகத்தின் கீழ் இயங்கும் சமூகபணிக்குழுவானது அருள் சகோதரி அருள்மேரி அவர்களின் வழிநடத்துதலின்படி சிறப்பாக கொண்டாடப்பட்டன. மேலும் பெண்கள் கலை நிகழ்ச்சி வழங்கி மகிழ்ந்தார்கள்.



B. ஆயர் ஜான் ஆலன் மாநிலம், திருச்சி சமூக பயன்பாட்டு பணிக்குழு சார்பாக 08.03.2025 இன்று அகில உலக பெண்கள் தினவிழா மேற்கு மரியநாதபுரம் புனித தெரசா தொடக்கப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாநில தலைமை சகோதரி வேளாங்கண்ணி ஷெரின் அவர்களும் சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் மறைமாவட்ட புனித வளனார் கல்வியியல் கல்லூரி முதல்வர் அருட்தந்தை வின்சென்ட் கமலக்கண்ணன் அவர்களும் கலந்து கொண்டனர். விழாவில் 20 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 3 மாதம் ஆரி ஒர்க் பயிற்சி இலவசமாக வழங்க பயிற்சி ஆசிரியர் அஞ்சலி தேவி நியமிக்கப்பட்டார். விழாவில் கலந்து கொண்ட பெண்கள் அனைவருக்கும் ஆரி ஒர்க் பயிற்சிக்கு தேவையான பொருட்கள் விழா பரிசாக வழங்கப்பட்டது.



c. 09.03.2025 அன்று அகில உலக பெண்கள் தினவிழா மழுவன்கருணையில் 300 பெண்களுடன் கொண்டாடப்பட்டது. முக்கிய அழைப்பாளராக சென்னை மாநில தலைவி ஸ்டெல்லா மேரி அவர்களும், சிறப்பு விருந்தினராக திருமதி. தமிழரசி சிவகுமார் அவர்களும், வீரஊர் பெண்கள் குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. எழிலரசி அவர்களும் கலந்து கொண்டு பெண்களின் முன்னேற்றத்தை பற்றியும் அவர்களின் வாழ்வாதாரம் உயர்வது பற்றியும் பேசினார்கள். மேலும் பெண்கள் கலை நிகழ்ச்சிகள் வழங்கினார்கள். 12 ஆம் வகுப்பில் முதலிடம் பிடித்த மாணவிகள் கிறிஸ்டி, அமலரோஸ் மற்றும் மாநில அளவில் நடனத்தில் முதல் பரிசு பெற்ற எமது மாலை நேர வகுப்பு மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியருக்கு பரிசு வழங்கப்பட்டது.



d. 08.03.2025, அன்று 11.00 மணியளவில் பெண்கள் தின விழாவானது புனித தாமஸ் பள்ளி வளாகத்தில் சித்தார்த்து நகர், கல்லூர், கங்காபூர் சிட்டி, ராஜஸ்தான் ஆகிய இடங்களில் சமூக மையங்களில் உள்ள பெண்கள் இணைந்து விழாவினை சிறப்பித்தனர். நிகழ்வின் சிறப்பு விருந்தினர்கள் பெண்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் பாதுகாப்பு, பெண் கல்வியின் முக்கியத்துவம் சுயதொழில் முன்னேற்றத்திற்கான அரசு நலத்திட்டங்கள் மருத்துவ நலத்திட்டம் என அனைத்து திட்டங்களிலும் விழிப்புணர்வு கொடுத்தனர். சிறப்பு விருந்தினர்களுக்கு மரக்கன்றுகளை கொடுத்து நன்றிகூறி மகிழ்ந்து விழாவானது நிறைவுற்றது.

## 3. புலம் பெயர்ந்தோருடன் சிலுவைப்பாதை:



23.03.2025 அன்று புலம்பெயர்ந்தோர்கான தவக்கால சிறப்பு நிகழ்ச்சியாக தூய தோமையார் மலையில் சிலுவைபாதையும் அதனைத் தொடர்ந்து சிறப்பு திருப்பலியும் நடைபெற்றன. இந்நிகழ்வினை லயோலா கல்லூரியுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டன. இந்நிகழ்வில் 160 கர்த்தோலிக்க புலம் பெயர்நதோர் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். இந்நிகழ்வில் அனைவருக்கும் சிறந்த உணவு, இனிப்பு போன்றவைகள் ஏற்பாடு செய்து தரப்பட்டன. இந்நிகழ்வில் அருள் சகோதரி அருள்மேரி ஆலோசகர் மற்றும் செயலர் சகோதரி எமிலா அவர்களும் கலந்து கொண்டு புலம் பெயர்ந்தாரோடு கலந்து பேசினார்கள்.

## 4. வேலைவாய்ப்பு பயிற்சி:



15.03.2025 அன்று சனிக்கிழமை 20 பெண்களுக்கு இலவச ஆரி ஒர்க் பயிற்சி மேற்கு மரியநாதபுரம், புனித தெரசா தொடக்கப் பள்ளியில் தொடங்கப்பட்டது. இதனை ஏற்பாடு செய்த திருச்சி ஆயர் ஜான் ஆலன் மாநில சமூக பயன்பாட்டு பணிக்குழு Co - Ordinator Sr. Anita அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

## 5. இலவச மருத்துவ முகாம்:



07.03.2025 அன்று பிருதூர் புனித வளனார் முதியோர் இல்லத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் Sugar, BP, Cholestral போன்றவை பரிசோதிக்கப்பட்டன. Dr. Aayish, Dr. Raja, Nurses கலந்து கொண்டு சிறப்பான முறையில் வழிநடத்தினார்கள். அனைவருக்கும் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டது.

## 6. MENSTRUAL HYGIENE AWARENESS PROGRAM:



Menstrual hygiene awareness program held in Siddharth Nagar, Dr. Gautam yadav explained in a very simple way about 1.What is Menstrual hygiene? 2.How to prevent Uterus cancer ? 3. What are the merits of using sanitary pads and demerits of clothes during cycline period? It was helpful to the village women to increase the knowledge about their biological changes. In this program 35 women's Participated.

**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# WOMEN AND FEMALE COMMISSION



25.03.2025 அன்று சபை ஆலோசக சகோதரி அருள்மேரி அவர்கள் Mariamma Schoolலை பார்வையிட்டார்கள். பார்வையின் போது அனைத்து பணியாளர்களோடும் தனித்தனியாக பேசி பள்ளியின் வளர்ச்சிக்காக உங்களின் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பு தேவை என்பதை வலியுறுத்தி செய்து கொண்டிருக்கின்ற பணிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்கள். அனைத்து பதிவேடுகளும் வரவு, செலவு கணக்குகளும் பார்வையிடப்பட்டது.

---



22.03.2025 அன்று பத்தியாவரத்தில் உள்ள குழந்தை இயேசு காப்பக குழந்தைகளை ஒரு நாள் சுற்றுலாப் பயணமாக MGMத்திற்க்கு அழைத்து சென்று குழந்தைகளை மகிழ்வித்தார்கள்.

**Sr. Arul Mary**
*Women & Female Commission, Co-ordinator*

---

# PROJECT COMMISSION

## PSYCHO-SOCIAL AND SPIRITUAL CHALLENGES AND REJUVENATION.

Amrat organized a valuable event, held on March 12th to 15th by2025, involved 52 participants from different parts of South India, with a resourceful team led by Mr. Tony and Mrs. Rajini, professors from the Christ College Department of Psychology.

The session covered a broad range of topics, such as:



Impact on Wellbeing: Exploring the effects of mental, physical, emotional, social, and spiritual well-being. Self-Care Strategies: Practical approaches for improving overall well-being.Faith and Healing: How faith can play a role in personal healing. Gender-Specific Challenges: Addressing challenges unique to different genders in a psychosocial context. Building Resilience: Techniques to foster mental strength and adaptability. Community and Continued Care: Emphasizing the importance of ongoing support and communal healing.

**Conclusion:** This type of event seems like a wonderful opportunity for personal growth and connecting with others on a deeper level. We thank and congratulate Sr. Francis Pappu for her active participation.

**Sr. Arul Mary**
*Project Commission, Co-ordinator*

## ஏழையரின் சிரிப்பில் இறைவனை கண்டோம்!



தவக்காலத்தில் பகிர்ந்து வாழ்வதில் மகிழ்வும் நிறைவும் பெறும் பொருட்டு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு ஏழை பங்கை தெரிவு செய்து அம்மக்களுக்கு சபை சார்பில் உதவிகள் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

a. 07.03.2025 அன்று நுகும்பல்போளூர் பங்கின் கிளைபங்குகளான கல்பட்டு, சுணாம்பேடு ஆகிய இடங்களில் உள்ள 30 குடும்பங்களை சபை தலைமை அன்னை எம் ஆரோக்கியம், சபை பொருளர் சகோதரி சீலியா இவர்களுடன் லூயிஸ் இல்லம் மற்றும் குவாசி இல்ல சகோதரிகள் இணைந்து அந்த கிராமப் புறங்களுக்குச் சென்று அவர்களோடு உரையாடி அங்கு நடைபெறும் செபமாலை, சிலுவைபாதை மற்றும் திருப்பலியில் பங்கெடுத்தும், கைம்பெண்கள் மற்றும் தொழுநோயாளிகளுக்கு உணவுப் பொருட்களும், ஆடைகளும், வழங்கி தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்கி வருவது நம் அனைவருக்கும் மகிழ்வை தருகிறது.



b. 14.03.2025 அன்று பண்ரூட்டி பங்கின் கிளைபங்கான ஏலக்காய்மங்கலத்தில் உள்ள 45 ஏழை எளிய மற்றும் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள், உணவுப் பொருட்களும், ஆடைகளும், வழங்கி தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்கி புனிதமாக்கி வருவது நம் அனைவருக்கும் மகிழ்வை தருகிறது.



c. 21.03.2025 அன்று சென்னை, கெருகம்பாக்கத்தில் உள்ள பிரேம வாசம் சிறப்புக் குழந்தைகள் இல்லத்திற்கு சென்று அங்கு உள்ள 176 குழந்தைகளை சந்தித்து அவர்களோடு உரையாடி அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களும் அன்றைய உணவு செலவீன தொகையும் வழங்கப்பட்டது. தவக்காலத்தின் ஒரு புனித முயற்சியாகவே அமைந்தது.



d. 29.03.2025 அன்று சென்னை, புனித தோமையார் மலை பகுதியில் உள்ள 40 கைம்பெண்களை தெரிவு செய்து அவர்களுக்கு உணவுப் பொருட்களும், ஆடைகளும், வழங்கி தவக்காலத்தை சிறப்புற செய்தது நம் சபையின் தனிவரத்தை செயலாக்கம் செய்திட்ட நிகழ்வாக அமைந்தது.

**Sr. Celia**
*Finance Commission, Co-ordinator*

# congratulations



மகளிர் தினத்தை முன்னிட்டு
சாதனை பெண்கள் விருது பெற்ற
அருட்சகோதரி. ரெக்ஸிலின் மைக்கேல்
அவர்களுக்கு எங்களது பாராட்டுகள்.

---



## பாராட்டுக்கள்....

உலகத்தாய் மொழி நாள் அன்று
தாய்த்தமிழ் விருது பெற்ற
அருட்சகோதரி. புனிதா வேதச்செல்வி
அவர்களுக்கு
எங்களின் பாராட்டுக்கள்



---

## பாராட்டுக்கள்....



வந்தவாசி வட்டார தமிழ் சங்கம்
பெண்கள் தின விழாவில்
தூய நெஞ்ச மகளிர் மேல் நிலைபள்ளி
தலைமை ஆசிரியர்
ம. ஜோ மரிய சற்பிரசாதம் அவர்களுக்கு
37 ஆண்டு சிறந்த ஆசிரியர் பணிக்கு
ஔவையார் விருது வழங்கப்பட்டது.

# கல்லறை திறந்தது... காவியம் மலர்ந்தது...

இலட்சியவாதிகள் மண்ணில் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள். வீரியமுள்ள விதையாக பாலஸ்தீன மண்ணிலே விதைக்கப்பட்ட கிறிஸ்து விருட்சமாகி இறைத்தன்மையிலும் மனிதத்தன்மையிலும் வேரோடி அகிலத்து மக்கள் அனைவருக்கும் நிழல் தரும் மரமாகக் கிளைபரப்பத் தொடங்கிய நிகழ்வுதான் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு.

அவரின் உயிர்ப்பு விடுக்கம் அழைப்பு, அறைகூவல் என்ன தெரியுமா? மனிதரின் புகழ்ச்சிக்கும், அகழ்ச்சிக்கும் இறந்தவர்களாகி, உண்மைக்கும் நன்மைக்கும் உயர்ந்த இலட்சியங்களுக்கும் உயிர்த்தெழுங்கள். அப்படி வாழ்ந்தவர்கள் தான் மாமனிதர்களாகப் போற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த வரிசையில் கிறிஸ்து முன்னணியில் இருக்கிறார்.

புனித வெள்ளி அன்று இறந்த கிறிஸ்துவை புதைத்துவிட்டோம் என்று மகிழ்ந்தவர்களுக்கு கருவி விட்டது. கல்லறைக்குள் வைக்கப்பட்ட இயேசு என்ற பூவை வைத்தவர்கள் மூச்சு வாங்குவதற்குள், இதோ முளைத்து விட்டது.. இல்லை இல்லை உயிர்த்து விட்டது,

இந்த இரவு கிறிஸ்தவர்களுக்கு புனிதமான இரவு, வித்தியாசமான இரவு, சிறப்பான
இரவு, மகத்தான இரவு, அரிய இரவு

இந்த இரவுக்கு இரவே கிடையாது..! பகல் மட்டுமே.
இருளே கிடையாது வெளிச்சம் மட்டுமே, சாவே கிடையாது வாழ்வு மட்டுமே
தீமையே கிடையாது மகிழ்ச்சி மட்டுமே, அநீதியே கிடையாது நீதி மட்டுமே
வன்மையே கிடையாது அமைதி மட்டுமே
இயேசுவே உமது உயிர்ப்பு சாவிற்கும் பாவத்திற்க்கும் கொடுத்த சவுக்கடி.

தமது இறையாட்சிப் பணி இறுதி மூச்சி வரை தந்தையின் திட்டத்தை நிறைவேற்றி வெற்றியும் கண்டவர் நம் இயேசு கிறிஸ்து.

ஆம்!

உமது உயிர்ப்பு எங்களுக்குப் புதுமை, உமது உயிர்ப்பு எங்களுக்கு அழைப்பு
உடைந்தது கல்லறை, விடிந்தது நம் வாழ்வு,
உள்ளம் நிறைந்த மகிழ்வோடு முழங்குவோம்
அல்லேலூயா... அல்லேலூயா...

இருளிலிருந்து ஒளிக்கும், இறப்பிலிருந்து பிறப்பிற்கும்
அபாய்மையிலிருந்து உண்மைக்கும், எங்களை அழைத்துச்
செல்லும்.



இயேசு ஆண்டவரே நாங்களும் உமது சாட்சியாக இந்த உலகில் வாழ்வும் ஒவ்வொரு நாளும் எல்லையில்லாத உமது உயிர்ப்பின் மகிழ்ச்சியைச் சுவைப்போம்.

அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துகள்....

**சகோ. திரேஸ், வ.பி.ச.**
மரியன்னை இல்லம்,
ஆவடி

# புனிதப்படுத்தும் காலம்! எதிர் நோக்கின் பயணம்!!

கத்தோலிக்க திரு அவையில் திருவழிபாடு பருவங்களில் சிறப்பான பருவமாக தவக்காலம் உள்ளது. திருநீற்று புதன் அன்று ஆரம்பித்து 40 நாட்கள் ஜெபமம், நோன்பும், தானமும் செய்து இயேசுவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு என்னும் உச்சத்தின் நிறைவை தவக்காலம் எட்டுகிறது. இந்நாட்களில் ஆண்டவர் எப்படிப்பட்டவர் என்பதை சிந்தித்து அவரது பேரன்பையும் இரக்கத்தையும், பொறுமையும் உய்த்து உணர்ந்து அகமகிழ நாம் அழைக்கப்படுகிறோம். நாம் திருநீற்று திருப்பலியில் சாம்பலை நம் நெற்றியில் பெற்ற பொழுது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்ற அழைப்பைப் பெற்றோம். நமது மன மாற்றம் இறைவன் நம் அயலார் மற்றும் இயற்கையை நோக்கியதாக அமைதல் வேண்டும். நாம் நமது அகத்தை உற்று நோக்கி, நமது சிந்தனை, சொல், செயல் அனைத்தும் இறைவனோடு நம்மை இணைப்பதாக இருக்க வேண்டும். இறை பிரசன்னத்தில் நாம் செய்யும் இறைவேண்டல் நம்மையும் இறைவனையும் இணைகின்றதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

1. தவக்காலத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய மூன்று நற்செயல்களில் முதலிடம் பெறுவது செபம். இந்த இறைவேண்டலே இறைவனையும், நம்மையும் இணைக்கின்றது. நம் கிறிஸ்துவ பாரம்பரியத்தில் செபத்தின் நான்கு கூறுகளை பற்றி திருச்சபை போதிக்கிறது.

**முதல்கூறு** – இறை புகழ்ச்சி: இறைவனின் பேரன்பை, மாட்சியை, காருண்ய கருணையை நினைத்து இறைவனை போற்றி மகிமைப்படுத்துதல்

**இரண்டாம் கூறு** – நன்றியறிதல்: இறைவன் புரிந்த அனைத்து நன்மைகளுக்காகவும் நெஞ்சார்ந்த நன்றியினை சமர்பித்து மாட்சிப்படுத்துவது.

**மூன்றாம் கூறு** – மன்னிப்பு கேட்டல்: நாம் இறைவனுக்கும் நம்முடன் வசிக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் எதிராக புரிந்த குற்றங்கள், பாவங்களுக்காக இறைவனிடமும், அயலாரிடமும் மன்னிப்பு இரந்து மன்றாடுதல்.

**நான்காம் கூறு** – விண்ணப்பம்: நம் தேவைகளை எடுத்து சொல்லி இறைவன் அருளாசீரை கெஞ்சி மன்றாடி நம் விண்ணப்பங்களாக இறைசமூகம் எழுப்புதல்.

இறைவன் இயேசு கற்றுத்தந்த செபத்தில் இந்த நான்கு கூறுகளும் அடங்கியிருப்பதை நாம் காண்கிறோம். எனவே ஆண்டவர் கற்றுத்தந்த செபம் உன்னத செபமாகும்.

**2. தவக்காலத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய இரண்டாவது நற்செயல் நோன்பு (அ) தவம் செய்தல்:**

நம் திருத்தந்தை பிரான்சிஸ் நோன்பின் அடிப்படைக் கூறு என்ன என்பதை தெளிவுப்படுத்துகிறார். நாம் சாபிடாமல் ஒறுத்தல் மேற்கொள்வது பட்டினி கிடப்போருக்கு, தேவையிலிருப்பவர்க்கு, வயது முதிர்ந்த ஆதரவற்றோருக்கு, வறியோருக்கு உதவ கூடியதாக அமைய வேண்டும். நோன்பின் தன்மை அடிப்படையில் மற்றவருக்கு

அன்புகாட்டுவதாக இருக்க வேண்டும் நோன்பை நாம் உபவாசம் என்கிறோம். நம் உபவாசம் சுயநலமின்றி நம்மை ஆண்டவருக்கு நெருக்கமானவர்களாக மாற்றவேண்டும். உபவாசம் வாசிப்பது, வசிப்பது என இரு பொருள்படுகிறது. அவர் சாயலில் இருக்கும் சகமனிதரோடு நல்லுறவில் வசிக்கவும், சகோதர சகோதரிகளோடு இணைந்திருக்கவும், திரு அவையோடு ஒன்றித்து பயணிக்கவும், உறவுகளோடும், இயற்கையோடும், ஒன்றித்திருக்கவும் நம்மை பக்குவபடுத்துவதாக உபவாசம் இருக்க வேண்டும்.

3. நாம் கடைபிடிக்க வேண்டிய மூன்றாவது நற்செயல் ஈகை (அ) தானம் செய்தல். நாம் தானம் செய்கையில் நம் உள்ளத்தை பார்க்கிறார், காணிக்கை பெட்டியின் அருகில் அமர்ந்து ஏழை கைம்பெண்ணின் காணிக்கையை உற்று நோக்கிய இயேசு அது மேலானது என பாராட்டி அக்காணிக்கையில், விதவையின் கண்ணீரை, வியர்வையை, செலவிட்ட நேரத்தை பார்க்கிறார். பலர் அவர்களிடம் மிகுதியானதில் இருந்து காணிக்கை செலுத்தினார்கள். ஆனால் இந்த ஏழைக் கைம்பெண் தன் வாழ்வை ஆதாரமாக இருந்ததையே உவந்து அளித்தார். இத்தகைய செயல்பாட்டை, மனநிலையை தான் இறைவன் இன்று எதிர்பார்க்கிறார்.

**தவக்காலம் நமக்கு மூன்று காலங்களையும், மூவொரு இறைவனின் செயல்களையும் நினைவூட்டுகிறது.**

**கடந்த காலம்:** நமக்கு இறைதந்தையின் பேரன்பையும் பேரிரக்கத்தையும் நம்முன் கொண்டு அவரை துதித்து ஆராதித்து மாட்சிபடுத்துகிறோம். மேலான மாட்சிமையை நினைத்து அகமகிழ்ந்து உமக்கு எதிராக பாவம் செய்தேன் என்று மனம் வருந்தி ஊதாரி மைந்தனைப் போல மனம் வருத்தம் அடைகிறோம்.

**நிகழ்காலம்:** ஆண்டவரே என் பாவம் என் கண்முன் நிற்கிறது. (தி.பா : 51:3) புனித பேதுரு போல ஆண்டவரே நான் பாவி என்னைவிட்டு அகன்று போய்விடும் (லூக் 5: 8) என்ற மனநிலையில் இறைமகன் இயேசுவின் மீட்பின் மாட்சியிலும் பங்கேற்க இந்த நிகழ்காலம் நம்மை இயேசுவிடம் அழைத்து செல்கிறது.

**எதிர்காலம்:** ஆண்டவரே, தூயதோர் உள்ளத்தை உருவாக்கி ஆவியை என்மீது பொழிந்தருளும் உமது ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். (தி.பா 51:11) என்று வேண்டுகிறோம். நாமும் ஆண்டவரிடம் திரும்பி வர புரப்படுவோம். பாவி என்னை அரவணைத்துக் கொள்ளும் ஆண்டவரே எங்களை உம்மிடமிருந்தும் உம்திருமகன் இயேசுவிடமிருந்தும் அன்பின் கனலாகிய தூய ஆவியாரிடமிருந்தும் எடுத்துவிடாதேயும். நாங்கள் மனம்மாறி திரும்பி வருகிறோம். எங்களை அன்புடன் அரவணைத்துக் கொள்ளும் என்று கூறி நமது தவக்கால நம்பிக்கை பயணத்தை தொடர்வோம்.

**Sr. Agnes Anthonimuthu**
St. Joseph's Convent
Vilamuthur



# WORLD HEALTH DAY

The world health organization was established on 7th April 1948. Realizing the Importance of health for successful life all over the world. World health day is a globally celebrated health awareness day. It says that health is life, But today in this busy world and stressed life. Humans are not able to pay full attention to their health. Human health is being adversely affected due to a hectic lifestyle, work and stress. World health day is celebrated every year to create awareness of the importance of health. on this day, a message is given to make people aware of their health and the government is motivated to formulate health policies.

**Awareness:** World health day activities revolve around the chosen topic in general activities are organized to indicate the importance of health. people are encouraged to change their unhealthy lifestyles and choose a healthy lifestyle that includes a healthy diet and exercise. and children's are our future and they should be specially made aware to lead healthy lifestyle.

**Theme:** The theme for world health day 2025 was “Healthy Beginnings, Hopeful Futures”. The health of mothers and babies is the foundation of healthy families and communities, helping ensure hopeful futures for us all.

**Conclusion:** In to day's time, the biggest reason for people not to be healthy is consuming junk food. many people prefer ready made food and outdoor food because they are tasty and easily available. junk food is made of many types of chemicals. this is the biggest reason that so many diseases are introduced. If we want to stay healthy then we should always eat health food and live a healthy lifestyle.



*World Health Day....* *Eat Right....*

*Exercise Regularly....* *Maintain Good Hygiene....*

*Sr. Jeya Augustina Fsj*
Amsi





## *congratulations*

***SR. MARY VERONA***
*has been elected as the*
***Secretary of the***
***TNPCRI Formators Forum.***
*Congratulations Dear Sister.*



# தமிழ் புத்தாண்டு கவிதை



சித்திரை மகளே, வாராய்!
சீர்பல கொணர்ந்து சேர்ப்பாய்!
இத்தரை செழிக்கச் செய்வாய்!
ஏழைகள் இடர்துடைப்பாய்!
நித்திரை விலக்கி வைப்பாய்!
நீடிய பெருமை சேர்பாய்!
முத்திரை பதித்துச் செல்வாய்!
முன்னிலும் புதிதாய் வந்தே!
நீர்வளம் பெருகி ஓட, நானிலம் விளைச்சல் கூட
பார்வளம் பெருகப், பஞ்சம் பட்டினி ஒழிக்க வாராய்!

நாட்டினில் அமைதி காக்க
நல்லறம் தழைத்து நிற்க
கூட்டமாய் இணைந்து மக்கள் கூடியே இனிது வாழ
சித்திரை மகளே வாராய்!

மனம் கனியாகவும், சிந்தை தேனாகவும்
முகம் மலராகவும், எண்ணம் பனி மலராகவும்
சொல் முத்துச்சரமாகவும்
செயல் பூச்சரமாகவும்
சித்திரை மகளே வாராய்!

தழிழன் என்றும் தலை நிமிர
தமிழும் தாயும் வானுயர
தடைகள் எல்லாம் தகர்த்தெறிய
தரணி எங்கும் தடம்பதிக்க
முயற்சி ஒன்றை விதையாக்கி
வெற்றியை நோக்கி முதல்படியை – இந்த
சித்திரை ஒன்றில் வைத்திடுவோம்.



*அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!*

சகோ. சுகன்யா, வ.பி.ச.
விராச்சலை

# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## APRIL

2025

| | |
|---|---|
| 1st | Sr. Mary Alexis<br>Sr. Packiam .A |
| 2nd | Sr. Prudentia<br>Sr. Mary Anitha<br>Sr. Jacintha .C |
| 3rd | Sr. Susila Jenita Mary<br>Sr. Velankanni .A<br>Sr. Maria Pushpam<br>Sr. Arockia Thanga Rani |
| 4th | Sr. Joice Fermi<br>Sr. Arputha Mary .M |
| 6th | Sr. Arockia Mary M.S. |
| 7th | Sr. Mary Salome<br>Sr. Maria Selvi Ratinam<br>Sr. Motcharackini Shanthi |
| 8th | Sr. Antoniammal Robert<br>Sr. Arockia Mary .S |
| 9th | Sr. Paska |
| 10th | Sr. Helen Gracy<br>Sr. Arockia Selvi |
| 11th | Sr. Saleth Mary .C<br>Sr. Leo Josphine<br>Sr. Jeyanthi Vidhya |
| 13th | Sr. Gemma Periyanayagam<br>Sr. Belsy Rani |
| 14th | Sr. Mary Jenova<br>Sr. Sophia<br>Sr. Sasmitha Pradhan<br>Sr. Jeya Rani .A<br>Sr. Sharmila |
| 15th | Sr. Sagaya Sangeetha<br>Sr. Srathanjali Digal |
| 18th | Sr. Alphonse Legori<br>Sr. Sebastin Jayaseeli |
| 19th | Sr. Leema Mary .A |
| 20th | Sr. Latha Juliet |
| 21st | Sr. Esther Jeyaseeli<br>Sr. Susai Maria Pakkiyam<br>Sr. Sagaya Mary Joseph<br>Sr. Rajmeena Singh |
| 22nd | Sr. Agnes Anthonimuthu<br>Sr. Fathima .D.A. |
| 24th | Sr. Mary Bertha<br>Sr. Maria Stella .S |
| 25th | Sr. Delphine Denis Rani |
| 26th | Sr. Smita Rani Singh<br>Sr. Illbatha |
| 27th | Sr. Francis Pappu |
| 28th | Sr. Margaritha Antony<br>Sr. Michael Vency |
| 29th | Sr. Fatima .N.S<br>Sr. Christu Rani |




*Be happy & Stay blessed*

# Beloved Sisters...



## Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Celestine | 01.04.2010 |
| Sr. Janet Mary | 01.04.2024 |
| Sr. Pauline Joseph | 03.04.2020 |
| Sr. Mary Valentine | 07.04.2017 |
| Sr. Mary Joachim | 09.04.1995 |
| Sr. Mary Jacintha | 09.04.2021 |
| Sr. Arockia Irudhyarani | 10.04.2021 |
| Sr. Mary Casilda | 11.04.2011 |
| Sr. Mary Innocentia | 11.04.2020 |
| Sr. Mary Columba | 12.04.1945 |
| Sr. Mary Juliet Flora | 14.04.1997 |
| Sr. Mary Catherine (S.G.III) | 15.04.1962 |
| Sr. Mary Mazzerello | 17.04.1979 |
| Sr. Mary Josephine Mercy | 20.04.1997 |
| Sr. Mary Clara | 22.04.2004 |
| Sr. Mary Josephine Raphaela | 23.04.2007 |
| Sr. Mary Sebastine (S.G.VII) | 25.04.1946 |
| Sr. Mary De' Sales | 26.04.1964 |
| Sr. Mary Fathima | 26.04.1998 |
| Sr. Mary Benigna | 28.04.2005 |
| Sr. Mary Martina (S.G.XI) | 29.04.1984 |
| Sr. Mary Gerald | 30.04.1989 |
| Sr. Mary Benita | 30.04.2008 |
| Sr. Mary Callista | 30.04.2017 |
| Sr. Mary Georgia | 30.04.2021 |

*May their souls Rest in Peace*

# சமூக தொடர்பு பணிக்குழு

## வேண்டுகோள்!



"உறவே நீ பேசு" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 71 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## உயிர்ப்பு பெருவிழா மற்றும் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**




**Dr. Sr. Mary Jenova fsj**

*General Councilor*

*Communication Commission*



WOMEN'S DAY CELEBRATION BY FSJ WOMEN'S GROUP AT ST. THOMAS HOSPITAL



RENOVATED ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL BUILDING AT VANDAVASI




RENOVATED ST. FRANCIS OF ASSISI CONVENT AT CHINNAMANUR




RENOVATED ST. MARY'S CONVENT, AVADI.




ASSISI WOMEN'S REHABILITATION HOME INAUGURATION ON
16TH OF MARCH 2025 IN ACHARAPAKKAM, ST. JOSEPH PROVINCE



ST. JOSEPH FEAST DAY CELEBRATION AT
ST. JOSEPH PROVINCIALATE, ACHARAPAKKAM ON 16TH MARCH 2025



THE RENOVATED FSJ LEGAL CELL &
ST. JOSEPH TYPEWRITING INSTITUTE, ST. THOMAS MOUNT, 25TH MARCH 2025,